நிதித் (ஓய்வூதியம்)துறை
தலைமைச் செயலகம்,
சென்னை.9.

**கடித எண். 43105/ஓய்வூதியம்/2013, நாள். 02.12.2013**

அனுப்புநர்
திரு. க. சண்முகம்,
அரசு முதன்மைச் செயலர்

பெறுநர்

அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை–600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை–600 032.
மாநில தகவல் ஆணையம், எண்.2, தியாகராய சாலை, எல்டாம்ஸ்ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை–18.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–600 018. (பெயரில்)
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை–600 018.
முதன்மை மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை–600 018.
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை–600 018.
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (CAB), சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை– 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை.600 003.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்/ வேலூர் / தூத்துக்குடி.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் /
முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–600 006.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

**நகல்:**
நிதித்(அ.ந.மு.I / அ.ந.மு.II / அ.ந.மு.III / பல்வகை/ஓ.கு.தீ/ஊ.கு./வரவு செலவு–பொது II / வரவு செலவு–பல்வகை / பொது) துறை, சென்னை–9.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006.
முதன்மை செயலர் மற்றும் கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை–600 015.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–600 108.
அனைத்து நகராட்சி ஆணையர்கள். அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்,
தலைவர், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை–600 006.
தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம், எண். 70, மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென்னை–600 010.
தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை–600 015.
தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம்
பொதுத் துறை வங்கிகளின் அனைத்து தலைமை அலுவலகங்கள்/ மண்டல அலுவலகங்கள்,
ஓய்வூதிய இயக்குநர், டி,எம்.எஸ் வளாகம், சென்னை–6 மூலமாக

மாநிலத் தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு, எண் 7,
பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண் 35, திரு.வி.க. நெடுஞ்சாலை, இராயப்பேட்டை
நெடுஞ்சாலை, சென்னை– 600 014.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண் 35, திரு.வி.க. நெடுஞ்சாலை, இராயப்பேட்டை
நெடுஞ்சாலை, சென்னை– 600 014.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95, அண்ணா நகர்,
சென்னை– 600 040.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் நல சங்கம், எண் 38–பி,
முதல் பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், நாராயணராவ் மாளிகை, முத்துகாளத்தி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை– 600 005.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

ஐயா,

பொருள்: ஓய்வூதியம் – அரசு ஊழியர்களின் திருமணமாகாத/ விவாகரத்தான/விதவை மகள்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவது குறித்து தெளிவுரை வழங்குவது– தொடர்பாக.

பார்வை:1. அரசாணைஎண்.325/ நிதி (ஓய்வூதியம்) நாள் 28.11.2011.
2. முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர்,
சென்னை மாநகராட்சி, சென்னை –3ன் கடிதம்
பொ.து.ந.க.எண்.பி.13/43185/2012 / நாள்.24.6.2013.

––––––

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சியின் முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர், முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணை குறித்து கீழ்க்கண்ட இனங்களுக்கு தெளிவுரை கோரியுள்ளார். அவ்வினங்களுக்கு, அரசும், கீழ்க்கண்டவாறு தெளிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

| வ எண். | தெளிவுரை கோரும் இனங்கள் | தெளிவுரை |
|---|---|---|
| 1. | ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களின் திருமணமாகாத மகள் அரசாணை வெளியிடப்பட்ட நாளான 28.11.11க்கு முன்னரே 25 வயது முடிவடைந்து குடும்ப ஓய்வூதியம் நிறுத்தப்பட்ட இனங்களுக்கு மீண்டும் அரசாணையின்படி மீண்டும் வழங்கலாமா? எந்த தேதியிலிருந்து மேற்குறிப்பிட்ட இனங்களுக்கு நிறுத்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் வழங்கலாம்? | அரசு ஊழியர்களின் திருமணமாகாத மகள் அரசாணை வெளியிடப்பட்ட நாளான 28.11.11க்கு முன்னரே 25 வயது முடிவடைந்து குடும்ப ஓய்வூதியம் நிறுத்தப்பட்ட நபர்களுக்கு அரசாணை வெளியிடப்பட்ட நாள் முதல் வழங்கலாம். |

| | | |
|---|---|---|
| 2. | அரசாணை வெளியிடப்பட்ட நாளான 28.11.2011க்கு முன்னரே காலமான ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியரின் திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகள்களுக்கு மட்டும் வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் வழங்கலாமா? | அரசாணை வெளியிடப்பட்ட நாளான 28.11.2011க்கு முன்னரே காலமான ஓய்வூதியர்/குடும்ப ஓய்வூதியரின் திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகள்களுக்கும் வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம், மேற்கூறிய அரசாணையில் உள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நேர்வுகளில் 28.11.11 முதல் வழங்கலாம். |
| 3. | பணியிலிருக்கும் போது காலமாகும் அரசு ஊழியர்களின் திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகள்களுக்கும் இவ்வரசாணை பொருந்துமா? ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியரின் திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகள்களுக்கு மட்டுமே இவ்வரசாணை பொருந்துமா? | பணியிலிருக்கும் போது காலமாகும் அரசு ஊழியர்களின் குடும்ப ஓய்வூதியர் மறைந்த பின்னரே திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகள்களுக்கும் அவ்வாணையில் உள்ள நிபந்தனைக்குட்பட்டு பொருந்தும். |
| 4. | ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் இறப்பிற்கு முன்னர் விவாகரத்தான / விதவையான 25 வயதுக்கு மேற்பட்ட மகளுக்கு மட்டுமே குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கலாமா அல்லது ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் காலமான பிறகு விவாகரத்து பெறற / விதவையான 25 வயதுக்கு மேற்பட்ட மகளுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கலாமா? | ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் காலமான பின்னரே விவாகரத்தான / விதவையான 25 வயதுக்கு மேற்பட்ட மகளுக்கும் அரசாணையில் உள்ள நிபந்தனைக்குட்பட்டு குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கும் நிலை எழும். |
| 5. | ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் இறப்பிற்குப்பின் திருமணமாகாத / விதவை / விவாகரத்தான 25 வயதுக்கு மேற்பட்ட மகள் என்பது ஆதரவற்ற திருமணமாகாத / ஆதரவற்ற விதவை / ஆதரவற்ற விவாகரத்தான 25 வயதுக்கு மேற்பட்ட மகள் போன்ற இனங்களை குறிப்பதாக கருதலாமா? | அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு அவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு வழங்கப்படும். |
| 6. | மாத வருமானம் ரூ.2,550/– என்பது ஊதியம் / வேறு குடும்ப ஓய்வூதியத்தில் பெறப்படும் வருமானம் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமா அல்லது வீட்டு வாடகை, ஜீவனாம்சம், வங்கி கணக்குகள் வட்டித்தொகை போன்ற ஏனைய வருமானங்களும் சேர்ந்த வருமானமா? | மாத வருமானம் ரூ.2,550/– என்பது அனைத்து வகையான வருமானங்களின் உள்ளடக்கம். |
| 7. | திருமணம் முடித்து எத்தனை ஆண்டுகளில் விதவை ஆன / விவாகரத்து பெற்ற மகளுக்கு இவ்வரசாணை பொருந்தும். உதாரணமாக திருமணம் முடித்து 20 ஆண்டுகளுக்கு பிறகு விதவை ஆகும் / விவாகரத்து பெறும் மகள்களுக்கும் இவ்வரசாணை பொருந்துமா? | ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர் இறந்த பின்னர் அரசாணை எண்.325, நிதித் (ஓய்வூதியம்)துறை, நாள்.28.11.11ல் வெளியிடப்பட்ட ஆணை நடைமுறைக்கு வரும் என்பதால் மேற்கூறிய அரசாணையில் உள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் அனைத்து பயனாளிகளுக்கும் பொருந்தும். |

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலருக்காக.